## நவம்பர் – 11 – சனி
## சூர்ஸ் நகர புனித மாட்டின்
## “கடவுள் உங்கள் உள்ளங்களை அறிவார்” லூாக் 16:15

**முதல் வாசகம் : உரோமையர் 16 :3–9,16,22 – 27**

கிறிஸ்து இயேசுவுக்காக என்னோடு சேர்ந்து உழைக்கின்ற பிரிஸ்காவுக்கும் அக்கிலாவுக்கும் என் வாழ்த்து. அவர்கள் என் உயிரைக் காக்கத் தலைகொடுக்கவும் முன்வந்தார்கள். அவர்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் மட்டும் அல்ல, பிற இனத்துத் திருச்சபைகள் அனைத்துமே நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றன. அவர்கள் வீட்டில் கூடும் திருச்சபைக்கும் வாழ்த்துச் சொல்லுங்கள். என் அன்பார்ந்த எப்பைனத்துக்கும் வாழ்த்துக் கூறுங்கள். ஆசியாவில் கிறிஸ்துவை முதன் முதல் ஏற்றுக் கொண்டவர் இவரே. உங்களுக்காக பாடுபட்டு உழைத்த மரியாவுக்கு வாழ்த்துத் தெரிவியுங்கள். என் உறவினர்களும் உடன் கைதிகளுமான அந்திரோனிக்கு, யூனியா ஆகியவர்களுக்கும் என் வாழ்த்துக்கள் திருத்தூதர்களுள் இவர்கள் பெயர்பெற்றவர்கள் இவர்கள் எனக்குமுன் கிறிஸ்தவர்கள் ஆனார்கள். ஆண்டவருக்கு உரியவரான என் அன்பார்ந்த அம்பிலியாத்துக்கு வாழ்த்துக்கள். கிறிஸ்துவுக்காக உழைக்கும் என் உடன் உழைப்பாளரான உர்பானுக்கும் என் அன்பார்ந்த ஸ்தாக்கிக்கும் வாழ்த்துச் சொல்லுங்கள். தூய முத்தம் கொடுத்து ஒருவர் மற்றவரை வாழ்த்துங்கள். கிறிஸ்துவின் எல்லாச் சபைகளும் உங்களுக்கு வாழ்த்துக் கூறுகின்றன. இந்தத் திருமுகத்தை எழுதிக் கொடுத்த தெர்த்தியுவாகிய நான் ஆண்டவருக்கு உரியவன் என்னும் முறையில் உங்களுக்கு வாழ்த்துக் கூறுகிறேன். நான் தங்குவதற்கும் சபையினர் அனைவரும் ஒன்று கூடுவதற்கும் தம் வீட்டில் இடமளிக்கிற காயு உங்களுக்கு வாழ்த்துச் சொல்லுகிறார். நகரத்தின் பொருளாளரான எரஸ்தும் நம் சகோதரனாகிய குவர்த்தும் உங்களுக்கு வாழ்த்துக் கூறுகிறார்கள். இயேசு கிறிஸ்துவைப் பற்றி நான் பறைசாற்றும் நற்செய்திக்கு ஏற்ப வாழக் கடவுள் உங்களை உறுதிப்படுத்த வல்லவர். ஊழி காலமாக மறைபொருளாக இருந்த இந்த நற்செய்தி இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இறைவாக்கினர் வாயிலாக இது நமக்குத் தெளிவாகியுள்ளது. என்றும் வாழும் கடவுளின் கட்டளைப்படி எல்லா மக்களினங்களுக்கும் அது தெரிய வந்துள்ளது. இதனால் அவர்கள் நற்செய்தியைக் கேட்டு நம்பிக்கை கொள்வர். ஞானமே உருவாகிய கடவுள் ஒருவருக்கே இயேசு கிறிஸ்துவின் வழியாய் என்றென்றும் மாட்சி உரித்தாகுக! ஆமென்.

**பதில்பாடல் :** கடவுளே என் அரசே உம் பெயரை
எப்பொழுதும் போற்றுவேன்

**நற்செய்தி : லூக்கா 16 : 9 - 15**

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது: ஆகையால், நான் உங்களுக்குச் சொல்கிறேன் நேர்மையற்ற செல்வத்தைக்கொண்டு உங்களுக்கு நண்பர்களைத் தேடிக்கொள் ளுங்கள். அது தீரும்பொழுது அவர்கள் உங்களை நிலையான உறைவிடங்களில் ஏற்றுக் கொள்வார்கள். மிகச் சிறியவற்றில் நம்பத் தகுந்தவர் பெரியவற்றிலும் நம்பத் தகுந்தவராய் இருப்பார். மிகச் சிறியவற்றில் நேர்மையற்றவர் பெரியவற்றிலும் நேர்மை யற்றவராய் இருப்பார். நேர்மையற்ற செல்வத்தைக் கையாளுவதில் நீங்கள் நம்பத்தகாதவராய் இருந்தால் யார் உங்களை நம்பி உண்மைச் செல்வத்தை ஒப்படைப்பார்? பிறருக்கு உரியவற்றைக் கையாளுவதில் நீங்கள் நம்பத்தகாதவர்களாய்ப் போனால் உங்களுக்கு உரியவற்றை உங்களுக்குக் கொடுப்பவர் யார்? ”எந்த வீட்டு வேலையாளும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்யமுடியாது ஏனெனில், ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அவர் அன்பு கொள்வார் அல்லது ஒருவரைச் சார்ந்து கொண்டு மற்றவரைப் புறக்கணிப்பார். நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்யமுடியாது.” பண ஆசைமிக்க பரிசேயர் இவற்றை யெல்லாம் கேட்டு இயேசுவை ஏளனம் செய்தனர். அவர் அவர்களிடம் கூறியது ”நீங்கள் உங்களை மக்கள்முன் நேர்மையாளராகக் காட்டிக் கொள்கிறீர்கள். கடவுள் உங்கள் உள்ளங்களை அறிவார். நீங்கள் உங்களை மக்கள்முன் உயர்ந்தவர்களாகக் காட்டிக் கொள்வது கடவுள் பார்வையில் அருவருப்பாகும்“ என்றார்.

**தியானம்:** இன்றைய இறைவார்த்தைப் பகுதியில் கடவுள் உங்கள் உள்ளங்களை அறிவார், நீங்கள் உங்கள் மக்கள் முன் உயர்ந்தவர்களாக காட்டிக் கொள்வது கடவுள் முன்னிலையில் அருவருப்பாகும் (லூாக். 16:15) என்று கூறி எமது உள்ளத் தூய்மை பற்றியும், எமது கிறிஸ்தவ வாழ்வின் விழுமியங்கள் பற்றி சிந்திக்கவும் அழைத்து நிற்கின்றது. புனித பவுல் நற்செய்திப் பயணத்தின் போது உரோமையருக்கு எழுதிய கடிதமொன்றை முதல் வாசகத்தில் படிக்கின்றோம். கிறஸ்துவுக்காக உழைக்கும் உழைப்பாளிகள், பணியாளர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் அன்பின் தன்மை கொண்டவர்களாக, ஒருவரை ஒருவர் ஏற்று வாழ்த்துக்கள் கூறி ஒற்றுமையுடனும், சமாதானத்துடனும் வாழ வேண்டு மென்று கூறப்பட்டுள்ளதை நாம் பார்க்கின்றோம். ஆம் நற்செய்தி வாசகம் கடவுள் முன்னிலையில் நேர்மையற்றதாகக் கருதப்படும். இவ்வுலக செல்வம் சேர்க்கும் பாதையில், நாம் பகைவர்களை சம்பாதித்துக் கொண்டிருக்கின்றோமா? அல்லது நம்மிடமுள்ள இவ்வுலக செல்வத்தைக்கொண்டு நாம் நண்பர்களை சேர்க்கின்றோமா? என்று கேட்டு, நாம் கடவுளுக்கும் செல்லவத்திற்கும் பணிவிடை செய்ய முடியாது என்பதை எமக்கு தெளிவுபடுத்துகின்றது. எனவே தான் அழிந்து போகக்கூடிய இவ்வுலக காரியங்களிலிருந்து விடுபட்டு சிறு சிறு காரியங்கள் எதுவாக இருந்தாலும் இறைவனுக்கு ஏற்றவகையில் செயற்படுவோம். இதுவே கடவுளுக்கு உகந்த செயலாகும்.